IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.63/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SUBRAMANI |
| FATHER'S NAME | : | PERUMAL |
| VILLAGE | : | CHAKKARAKUTTAI |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 84 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of October 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சக்கராகுட்டை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி தாமோதரன் எனது மகன் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. எனக்கு நான்கு பெண்பிள்ளைகள் உள்ளார்கள் கடைசி மகன் தான் எதிரி தாமோதரன். எனக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் நெடுஞ்சாலைத்துறையினர் ரிங் ரோடு அமைப்பதற்காக 50 செண்ட் நிலத்தை கையகப்படுத்தி இழப்பீடாக ரூ.9,32,000/- அளித்தார்கள். அதில் ரூ.9,00,000/- எனது மகன் எடுத்துக்கொண்டார். பிறகு எனது வீடு, நிலம் ஆகியவற்றை இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னிடம் இருந்து வற்புறுத்தி பிடுங்கிக்கொண்டார். ஆகையால் எனது மகள்களின் வீட்டில் இருந்து வருகிறேன். இது தொடர்பாக நான் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருந்தேன். 21.01.2024 ம் தேதி மாலை 4.30 மணியளவில் நான் எனது இரண்டாவது மகன் பவானி என்பவரின் வீட்டில் இருந்த போது எதிரி அங்கு வந்து என்னை அசிங்கமாக திட்டி, செருப்பு காலால் எனது மார்பின் மீது எட்டி உதைத்தார். கைகலால் என்னை மாறி மாறி அடித்து காயப்படுத்தினார். அவரிடம் நான் கெஞ்சி கேட்டும் அவர் விடாமல் என்னை அடித்தார். எனது அலறல் சத்தம் கேட்டு எனது மருமகன் மற்றும் பேரன்கள் அங்கு வந்து என்னை காப்பாற்றி ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்துச்சென்றார்கள் அங்கு 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை அடுக்கம்பாறை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது வந்து என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை இல்லை.**